## பயிற்சி 4.5

### பலவுள் தெரிவு வினாக்கள்

1. $\frac{AB}{DE} = \frac{BC}{FD}$ எனில், $ABC$ மற்றும் $EDF$ எப்பொழுது வடிவொத்தவையாக அமையும்.

(அ) $\angle B = \angle E$ (ஆ) $\angle A = \angle D$ (இ) $\angle B = \angle D$ (ஈ) $\angle A = \angle F$

2. $\Delta LMN$ -யில் $\angle L = 60°$, $\angle M = 50°$ மேலும், $\Delta LMN \sim \Delta PQR$ எனில், $\angle R$ –யின் மதிப்பு

(அ) $40°$ (ஆ) $70°$ (இ) $30°$ (ஈ) $110°$


3. இருசமபக்க முக்கோணம் $\Delta ABC$ -யில் $\angle C = 90°$ மற்றும் $AC = 5$ செ.மீ, எனில் $AB$ ஆனது

(அ) 2.5 செ.மீ (ஆ) 5 செ.மீ (இ) 10 செ.மீ (ஈ) $5\sqrt{2}$ செ.மீ

4. கொடுக்கப்பட்ட படத்தில் $ST \parallel QR$, $PS = 2$ செ.மீ மற்றும் $SQ = 3$ செ.மீ. எனில், $\Delta PQR$ –யின் பரப்பளவுக்கும் $\Delta PST$ –யின் பரப்பளவுக்கும் உள்ள விகிதம்

(அ) 25 : 4 (ஆ) 25 : 7

(இ) 25 : 11 (ஈ) 25 : 13




5. இரு வடிவொத்த முக்கோணங்கள் $\Delta ABC$ மற்றும் $\Delta PQR$ –யின் சுற்றளவுகள் முறையே 36 செ.மீ மற்றும் 24 செ.மீ ஆகும். $PQ = 10$ செ.மீ எனில், $AB$–யின் நீளம்

(அ) $6\frac{2}{3}$ செ.மீ (ஆ) $\frac{10\sqrt{6}}{3}$ செ.மீ (இ) $66\frac{2}{3}$ செ.மீ (ஈ) 15 செ.மீ

6. $\Delta ABC$ –யில் $DE \parallel BC$. $AB = 3.6$ செ.மீ, $AC = 2.4$ செ.மீ மற்றும் $AD = 2.1$ செ.மீ எனில், AE –யின் நீளம்

(அ) 1.4 செ.மீ (ஆ) 1.8 செ.மீ (இ) 1.2 செ.மீ (ஈ) 1.05 செ.மீ


7. $\Delta ABC$ -யில் $AD$ ஆனது, $\angle BAC$ -யின் இருசமவெட்டி. $AB = 8$ செ.மீ, $BD = 6$ செ.மீ மற்றும் $DC = 3$ செ.மீ எனில், பக்கம் $AC$ -யின் நீளம்

(அ) 6 செ.மீ (ஆ) 4 செ.மீ (இ) 3 செ.மீ (ஈ) 8 செ.மீ

8. கொடுக்கப்பட்ட படத்தில் $\angle BAC = 90°$ மற்றும் $AD \perp BC$ எனில்,

(அ) $BD \cdot CD = BC^2$ (ஆ) $AB.AC = BC^2$

(இ) $BD \cdot CD = AD^2$ (ஈ) $AB \cdot AC = AD^2$




9. 6 மீ மற்றும் 11 மீ உயரமுள்ள இரு கம்பங்கள் சமதளத் தரையில் செங்குத்தாக உள்ளன. அவற்றின் அடிகளுக்கு இடையேயுள்ள தொலைவு 12 மீ எனில் அவற்றின் உச்சிகளுக்கு இடையே உள்ள தொலைவு என்ன?

(அ) 13 மீ (ஆ) 14 மீ (இ) 15 மீ (ஈ) 12.8 மீ